***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 394/2020 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | ஜெயபால் |
| *Father/Husband's Name* | சதாசிவம் |
| *Village* | குன்னியூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *76* |

**எதிரி 2 ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.08.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். எனது உறவுக்காரர். எதிரிகளை எனக்கு தெரியும்.

2. எனது கொழுந்தியாள் சித்ரா என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நான் விசாரிப்பதற்காக மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். அப்போது அன்றைய நாள் நெடுஞ்சாலையில் அவருடைய செயின் பறிக்கப்பட்டதாகவும் அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் என்னிடம் கூறினார். சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பட்டியல் சாட்சி 2 சித்ரா எனது கொழுந்தியாள் என்றால் - சரிதான். சித்ராவின் அக்கா வீடு மன்னார்குடியில் உள்ளதா என்றால் - எனக்கு தெரியாது. சித்ராவை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் - மன்னார்குடி மருத்துவமனையில் வைத்து பார்த்தேன்.

2. எனக்கு சம்பவம் பற்றி யார் போன் செய்து சொன்னது என்றால் - யாரென்று ஞாபகம் இல்லை. யாரோ சொன்னார்கள். அமரேசன் புகார் கொடுக்க சென்றபோது அவருடன் நான் சென்றேனா என்றால் - இல்லை. நான் தனியாகவும் போலிசார் விசாரணைக்கு இந்த வழக்கு சம்மந்தமாக செல்லவில்லை. நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் - சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எந்த தருணத்திலும் விசாரிக்கவில்லை என்றால் - சரிதான்.

3. அடிப்பட்டவர் சித்ரா எனது கொழுந்தியாள் என்பதற்காக இன்றைய தினம் தான் போலிசார் என்னை சாட்சியாக வரச்சொன்னார்கள் என்றால் - சரிதான். சித்ரா எனது உறவுக்காரர் என்பதற்காக போலிசார் கூப்பிட்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் - சரிதான்.

4. முதல் விசாரணையில் சொன்னவை அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததுதான் என்றால் - சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோன்று எந்தவித சம்பவமும் நடைப்பெறவில்லை என்றும் அ.சா.1 சித்ரா எனது உறவுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.